| தரம் - 13 (2024) | பொருளியல் - II | மூன்று மணித்தியாலங்கள்<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள் |
|---|---|---|

- **ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - "அ"

01) (i) ஓர் உற்பத்திக் காரணி என்ற வகையில் முயற்சியாண்மையானது உழைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (4 புள்ளி)

(ii) ஓர் உற்பத்தி இயல்தகவு எல்லையின் மீதுள்ள சகல புள்ளிகளும் பொருளாதார வினைத்திறன் தொடர்பில் சமனானவையா? உமது விடையை விளக்குக. (4 புள்ளி)

(iii) புடவை மற்றும் நெல் உற்பத்தியில் ஈடுபடும் கூடிச் செல்லும் எல்லை அமையச் செலவை எதிர்நோக்கும் நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லை வளையிகளை வரைக.
பின்வரும் நிகழ்வுகள் காரணமாக உற்பத்தி இயல்தகவு எல்லை எவ்வாறு மாற்றமடையும் எனக் காட்டுக.

(அ) முன்னேற்றகரமான புதிய வளமாக்கியொன்று கண்டுபிடிக்கப்படல்

(ஆ) இரு உற்பத்தித் தறைகளிலும் ஈடுபடும் ஊழியர்களின் எண்ணிக்கையில் பாரியளவிலான அதிகரிப்பு ஏற்படல்.

(இ) அதிக வரட்சி நிலை காரணமாக பயன்பாட்டிலுள்ள பயிர்செய்யும் நிலங்களின் அளவு 10 % தினால் குறைவடைதல்.

(ஈ) உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையில் புடவை உற்பத்தித்துறையில் புதிய தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்படல். (4 புள்ளி)

(iv) "அதிகரிக்கும் அமையச் செலவு விதியை விளக்குக.
அமையச் செலவு அதிகரிக்க ஏதுவான காரணிகள் எவை? (4 புள்ளி)

(v) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

02) (i) ஒரு சாதாரண பொருளின் சந்தைக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (4 புள்ளி)

(ii) ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் போது அப்பொருளின் கேள்வித் தொகை வீழ்ச்சியடைவது ஏன் என விளக்குக. (4 புள்ளி)

(iii) பின்வரும் பொருள்களின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதிகளின் அடிப்படையில் அவற்றை நீர் எவ்வாறு ஆடம்பரப் பொருள், அத்தியாவசியப் பொருள், இழிவுப் பொருள் என வகைப்படுத்துவீர்?

| | | |
|---|---|---|
| (அ) | செல்லிடத் தொலைபேசி | 1.6 |
| (ஆ) | போத்தலில் அடைக்கப்பட்ட நீர் | 1.2 |
| (இ) | பாண் | 0.8 |
| (ஈ) | கௌபி | $-0.7$ |

*(4 புள்ளி)*

(iv) விலை தவிர்ந்த ஏனைய பங்கீட்டு முறைகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக. *(4 புள்ளி)*

(v) பாண் ஒரு இறாத்தல் இன் விலை 140 ஆக உள்ள போது 20 இறாத்தல்களைக் கொள்வனவு செய்யும் ஒரு நுகர்வோர் இறாத்தல் ஒன்றின் விலை 160 ரூபாவாக அதிகரிக்கும் போது 16 இறாத்தல்களை கொள்வனவு செய்வதாக கருதுக. இந்நுகர்வோரின் விலைக் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக. *(4 புள்ளி)*

*03)* (i) ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாட்டினை அர்த்தமுள்ளதாக்குவதற்குப் பயன்படும் விலை அல்லா மூலகங்கள் *4* தருக. *(4 புள்ளி)*

(ii) விவசாயப் பண்டங்களின் விலையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் *4* தருக. *(4 புள்ளி)*

(iii) அரசு ஒரு விவசாயப் பொருளுக்கு உத்தரவாத விலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி மிகை நிரம்பலை அகற்றுவதற்கு குறை நிரப்பு கொடுப்பனவு முறையை செயற்படுத்துகின்றது எனக் கருதவும்.

(அ) குறை நிரப்பு கொடுப்பனவு என்றால் என்ன? *(2 புள்ளி)*

(ஆ) குறை நிரப்பு கொடுப்பனவின் போது உற்பத்தியாளர் வருமானம் என்பதில் உள்ளடங்குபவை எவை? *(2 புள்ளி)*

(iv) குறித்த சந்தையில் ஒரு பொருளிற்கான கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு

$$QD = 100 - 2P$$

$$QS = -30 + 3P$$

*(1)* சமனிலை விலைத் தொகை யாது?

*(2)* சமனிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி யாது?

*(3)* இந்நிலையில் உற்பத்தியாளருக்கு அரசாங்கம் அலகொன்றுக்கு ரூபா 5 மானியமாக வழங்கினால் புதிய சமனிலை விலை தொகையை கணிப்பிடுக.

*(4)* மானியம் காரணமாக மொத்த மிகையில் ஏற்படும் மாற்றம் யாது? *(8 புள்ளி)*

*04)* (i) குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு நீண்டகால உற்பத்தி தொழிற்பாடு ஆகியவற்றை வேறுபடுத்தும் விதிகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(5 புள்ளி)*

(ii) தனியுரிமைச் சந்தையொன்றில் நிறுவனமொன்று புதிதாக பிரவேசிப்பதற்கு காணப்படும் இயற்கை மற்றும் செயற்கை தடைகள் மூன்றைக் குறிப்பிடுக. *(3 புள்ளி)*

(iii) பின்வரும் செலவு வகைகள் நிலையான செலவு மாறும் செலவு எனக் குறிப்பிடுக.

A - நிறுவன கட்டிடத்துக்கான வாடகை


B - மூலதனத்துக்கான வட்டிக் கொடுப்பனவு

C - நாளாந்த ஊழியர் கொடுப்பனவு

D - நிறுவன உற்பத்திக்கான மூலப்பொருள் கொள்வனவு *(2 புள்ளி)*

(iv) மாற்றல் கட்டணம், பொருளாதார வாடகை என்பவற்றை வேறுபடுத்தி, காரணி வருமானம் முழுவதும் மாற்றல் கட்டணமாக அமையும் சந்தர்ப்பத்தை வரைபில் காட்டுக. *(4 புள்ளி)*

(v)




A - நிறுவனத்தின் பொருளாதார இலாபம் யாது? *(2 புள்ளி)*

B - நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு யாது? *(2 புள்ளி)*

C - நிறுவனத்தின் விலை 40 ரூபாவாக வீழ்ச்சியடையுமாயின் நிறுவனத்தின் வெளியீடு எவ்வளவாக காணப்படும்? அதற்கான காரணம் யாது? *(2 புள்ளி)*

*05)* (i) கூட்டப்பட்ட பெறுமதி என்றால் என்ன? அது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதை புள்ளி விபர உதாரணத்துடன் விளக்குக. *(4 புள்ளி)*

(ii) கருதுகோள் ரீதியான பொரளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுவதாகக் கொள்க. (சகல புள்ளி விபரங்களும் ரூபா மில்லியன்களில்)

| வகை | பெறுமதி |
|---|---|
| வேலை வாய்ப்பு வருமானம் | 3 000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 4 500 |
| நிலையான மூலதன நுகர்வு | 1 000 |
| கலப்பு வருமானம் | 2 000 |
| தேறிய நேரில் வரி | 2 500 |
| உற்பத்தி மீதான வேறு வரிகள் கழி மானியம் | 1 800 |
| தேறிய முதல்நிலை வருமானம் | − 700 |

(அ) இப் பொருளாதாரத்தின் மொத்த கூட்டப்பட்ட பெறுமதியைக் கணிப்பிடுக. (2 புள்ளி)

(ஆ) இப் பொருளாதாரத்தின் சந்தை விலை மொத்த தேசிய வருமானத்தைக் கணிப்பிடுக. (2 புள்ளி)

(iii) ஒரு எளிய பொருளாதாரத்தின் சமநிலையில் சேமிப்பு கட்டாயம் முதலீட்டுக்கு சமமாகக் காணப்பட வேண்டும். ஆனால் ஒரு மூடிய பொரளாதாரத்தில் அரச தலையீடு காணப்படும் போது சமநிலையில் சேமிப்பு முதலீட்டுக்கு சமமாக வேண்டும் என்ற நிபந்தனையல்ல. விளக்குக. (4 புள்ளி)

(iv) ஒரு எளிய பொருளாதாரத்தின் தரவுகள் வருமாறு

நுகர்வு $C = 800 + 0.75yd$

$I = 200$

(அ) சமநிலைத் தேசிய வருமானம் யாது? (2 புள்ளி)

(ஆ) சமநிலையில் நுகர்வு மற்றும் சேமிப்பு யாது? (4 புள்ளி)

(இ) சமநிலையினை உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் அணுகு முறையில் வரைபில் காட்டுக. (2 புள்ளி)

## பகுதி - "ஆ"

06) (i) $M4$ பண நிரம்பலில் உள்ளடக்கப்பட வேண்டிய அண்மிய பணக் கூறுகள் எவை? (4 புள்ளி)

(ii) உயர் வலுப் பணம் என்றால் என்ன? அதன் கூறுகளைத் தருக. (4 புள்ளி)

(iii) கேள்வித் தூண்டல் மற்றும் செலவுத் தூண்டல் பண வீக்கங்களை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளி)

(iv) வங்கி வாடிக்கையாளர் ஒருவர் ரூபா 500 இனை தனது நடைமுறைக் கணக்கில் புதிதாக வைப்பில் இடுகின்றார். அவசியமான ஒதுக்கு வீதம் 20 % ஆகக் கருதுக.

(1) இப்பதிய வைப்புக்கான ஒதுக்கின் அளவு யாது? (2 புள்ளி)

(2) புதிய வைப்பின் அடிப்படையில் வங்கி வழங்கக்கூடிய உச்சக் கடனளவு யாது? (2 புள்ளி)

(v) விலை உறுதிப்பாட்டை மீட்டெடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கிஅ ண்மையில் பின்பற்றிய வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

07) (i) சந்தைத் தோல்விக்கான பிரதான காரணிகள் மூன்றும் எவை? (3 புள்ளி)

(ii) சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய இலங்கை அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அண்மைக் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை? (4 புள்ளி)

(iii) இலங்கை அரசாங்கம் உழைக்கின்ற வரியல்லா அரசிறைகள் மூன்று தருக. (3 புள்ளி)

(iv) இலங்கையின் அரச வரவு செலவுத் திட்டத்தின் கற்பிதமான சில தரவுகள் பின்வருமாறு

| | **(மில்லியனில்) - ரூபா** |
|---|---|
| வரி வருமானம் | 170000 |
| வரியல்லா வருமானம் | 150000 |
| அரச பெறுகைகள் | 330000 |
| நடைமுறைச் செலவுகள் | 290000 |
| வட்டிச் செலுத்தல்கள் | 40000 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 200000 |
| கடன் மீள் செலுத்தல்கள் | 30000 |

பின்வருவனவற்றைக் காண்க.

(அ) நடைமுறைக் கணக்கு மீதி

(ஆ) சமூல மீதி

(இ) முதன்மைக் கணக்கு பற்றாக்குறை

(ஈ) தேறிய பற்றாக்குறை *(8 புள்ளி)*

(v) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் அரச கடனின் போக்கினை பரிசீலனை செய்க. *(2 புள்ளி)*

08) (i) சர்வதேச போட்டித் தன்மை மற்றும் போட்டி நன்மை இரண்டையும் வேறுபடுத்துக. *(4 புள்ளி)*

(ii) நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் ஓர் அலகு உழைப்புக் காரணியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி தொடர்பான விபரங்கள் வருமாறு

| | நோர்வே | சுவீடன் |
|---|---|---|
| வானொலி | 4 | 20 |
| தொலைக்காட்சி | 6 | 10 |

மேலுள்ள தகவல்களின் அடிப்படையில்

A - ஓர் அலகு வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு இரு நாடுகளும் பயன்படுத்த வேண்டிய உழைப்பு காரணியின் அளவினைக் குறிப்பிடுக. *(2 புள்ளி)*

B - சிறக்கும் இயல்பின் அடிப்படையில் *1* அலகு வானொலிக்காக *2* அலகு தொலைக்காட்சிப் பெட்டி எனும் பரிமாற்று வீதத்தில் வர்த்தகத்தில் ஈடுபட முடியுமா? காரணம் தருக. *(2 புள்ளி)*

(iii) 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் இறக்குமதி அமைப்பினைத் தருக. *(3 புள்ளி)*

(iv) சென்மதி நிலுவை அட்டவணை ஒன்றின் நிதிக் கணக்கில் உள்ளடக்கப்படும் ஏனைய முதலீடுகள் என்பதனுள் உள்ளடங்கியுள்ள கூறுகள் எவை? *(4 புள்ளி)*

(v) மிதக்கும் நாணய மாற்று வீத முறையில் ரூபாவின் டொலர்ப் பெறுமதி அதிகரிக்கும் போது ரூபாவிற்கான கேள்வித் தொகை வீழ்ச்சியடைவது ஏன்? விளக்குக. *(5 புள்ளி)*

09) (i) பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன? அதனை ஏற்படுத்தும் பிரதான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(5 புள்ளி)*

(ii) ஐககிய நாடுகள் ஸ்தாபனம் 2016 – 2030 க்கு இடையில் உலக நாடுகள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளை ($SDGS$) அடைந்து கொள்ள வேண்டும் என 2015ம் ஆண்டு இறுதியில் அறிவித்திருந்தது. அதிலுள்ள 17 குறிக்கோள்களில் முதல் ஐந்து குறிக்கோள்களையும் பெயரிடுக. *(5 புள்ளி)*

(iii) சார்பு வருமானப் பரம்பல் என்றால் என்ன? அதில் ஏற்படும் மாற்றத்தினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் எவை? *(5 புள்ளி)*

(iv) உலக வங்கியானது நாடுகளை அவற்றின் தலைக்குரிய வருமான மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. அப்பிரிவுகளையும் ஒவ்வொரு பிரிவுக்குமான வருமான எல்லைகளையும் குறிப்பிட்டு இலங்கை 2022 ஆண்டுத் தரவின் படி எப்பகுதிக்குள் உள்ளடக்கபடப்டுள்ளது? *(5 புள்ளி)*

((10) (i). 2022இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிவீதம் எதிர்க்கணியமாகக் காணப்பட்டமைக்குரிய காரணங்கள் யாவை? **(5 புள்ளிகள்)**

(ii). இலங்கையின் வேலையின்மையின் தனித்துவமான பண்புகளை சுருக்கமாக விளக்குக. **(5 புள்ளிகள்)**

(iii). இலங்கையின் வறுமை சமீப ஆண்டுகளில் அதிகரித்தமைக்குரிய காரணங்களை விளக்குக? **(5 புள்ளிகள்)**

(iv). அண்மைக்காலத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளை நோக்கி மூளைசாலிகளின் வெளியேற்றத்தினை தூண்டும் காரணிகளை குறிப்பிட்டு அதனால் ஏற்படும் விளைவுகளையும் விளக்குக? **(5 புள்ளிகள்)**